Trasning for Mathematics Teachers

* 263 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any massive programme to train Mathematics Teachers is to be undertaken during 1972; and

(*b*) if so, the details thereof?

கணித ஆசிரியர்களுக்குப் பயிற்சி

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கணித ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க பெரிய திட்டம் ஏதும் 1972 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருந்ததா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) கணக்கு மற்றும் அறிவியலைப் பொறுத்தவரை புதிய பாடத் திட்டங்களை துவக்கப் பள்ளிகளில் கல்வியாண்டு 1973-74 முதல் நடைமுறைக்குக் கொண்டுவர, 32,100 துவக்கப் பள்ளிகளில் பணியாற்றும் 58,500 துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு இவ்வாண்டு நவம்பர் மாத முதல் 1973-ம் வருடம் மே மாதத்திற்குள் 8 நாட்கள் கணக்குக்கு அல்லது அறிவியலுக்கு மட்டும் 1,500 பயிற்சி வகுப்புகளுக்கு மேற்படாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட 80 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் தீவிரப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, இதற்கான செலவு எவ்வளவு, எந்தெந்தப் பாடங்களுக்காக இந்தத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1-வது முதல் 5-வது வகுப்பு வரையில் புதிய பாடத் திட்ட அடிப்படையில் கணக்கும் அறிவியலும் சொல்லிக் கொடுக்க, அதற்காக 39 லட்ச ரூபாய் செலவாகியிருக்கிறது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, மேலும் எவ்வளவு ஆசிரியர்களுக்கு இந்தப் பயிற்சி கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது ? இந்தப் பயிற்சியின் நோக்கமென்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, புதிய பாடத் திட்ட அடிப்படையில் கணக்கும் அறிவியலும் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க அவர்களுக்குப் பயிற்சி வேண்டுமென்பதற்காக 350 பட்டதாரி ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப் பட்டு வருகிறது. ஆகவே 80 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் தீவிரப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே இந்த 350 பட்டதாரி ஆசிரியர் களை வைத்து இந்த 58,500 துவக்கப்பள்ளி ஆசிரியர்களை இங்கே வரவழைத்து, 8 நாட்கள் இருக்கச் செய்து, அவர்கள் புதிய பாடத் திட்டத்தின் அடிப்படையில் கணக்கும் அறிவியலும் எப்படிச் சொல்லிக் கொடுக்கலாம் என்பதற்காக தீவிர பயிற்சி அளிக்க இந்த ஏற்பாடு; இதற்காக 39 லட்ச ரூபாய் செலவு. மே திங்களில் இந்தப் பயிற்சி முடிவடையும். அடுத்த கல்வியாண்டுத் துவக்கத் திலிருந்து 1-வது முதல் 5-வது வகுப்பு வரை இந்த ஆசிரியர்கள் புதிய திட்டத் தின்படி கணக்கும் அறிவியலும் சொல்லிக் கொடுக்கிற வாய்ப்பைப் பெறுகி றார்கள்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட பயிற்சிக்குச் செல்லக்கூடிய ஆசிரியர்களுக்கு, தொடக்கப் பள்ளியிலிருந்து செல்லக் கூடிய வர்களுக்கு, அந்தப் பயிற்சி நிலையத்திலிருந்து 5 மைலுக்கு உட்பட்டிருக்கிற வர்களுக்கு டி.ஏ. வழங்கப்படவில்லையென்ற புகார் வந்திருக்கிறதா? இந்த டிரெயினிங் நடைமுறைக்கு வந்து இருப்பினும், இந்தப் பயிற்சிக்கு மட்டும் ஏன் வழங்கப்படவில்லை? அரசு இதுபற்றி நடவடிக்கை எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

4·20 பி. ப. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதுபற்றிய புள்ளி விவரம் திரட்டித் தரப்படும்.

திரு. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, ஒன்றுவதிலிருந்து 5-வது வரைதான் இந்தக் கல்வி புகுத்தப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன் னார்கள். அதுவும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஆரம்பப் பள்ளியில் இதற்காக உத்தியோகம் கொடுப்பதற்கு அரசு ஏதாவது ஆலோசனை செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு, இந்தத் துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி தரப்படும். அந்தத் துவக்கப் பள்ளிக்குப் போய் அவர்கள் மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பார்கள். அதற்காகத்தான் பட்டதாரி ஆசிரியர்கள் 350 பேர் அறிவியல், கணக்கியல் போன்றவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.